1981 மார்ச் 2]

னுடைய தொகுதியில் இருந்து ஒரு 20-21 பேர் ஒரு டெபுடேஷன் மாதிரி இங்கே வந்து இருக்கிறார்கள். கரண்ட் ஒழுங்காக வரவில்லை. ஒரு 10-15 நிமிடம் தான் வருகிறது. அதனால் விவசாயிகள் அவஸ்தைப்படுகிறார்கள். ஆகவே, அந்தப் பகுதிக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அனுப்பி, ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு 3 அல்லது 4 மணி நேரம் ஒரு நாளைக்கு மின்சாரம் கொடுக்க அரசு ஏற்பாடு செய்தால் நல்லது, அதைச் செய்ய அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மின் இணைப்புகள் சம்பந்தமாக சட்டப்பேரவை உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் கொண்ட ஆலோசனைக் குழு நன்கு பரிசீலித்தது. அவர்கள் மின் வாரியத்திற்குச் சொல்லியிருக்கும் ஆலோசனை என்னவென்றால், எந்தெந்த மாவட்டங்களில் நீண்ட காலமாக மனுக்கள் தேங்கிக் கிடக்கின்றனவோ, அந்தந்த மாவட்டங்களுக்குக் கொஞ்சம் முன்னுரிமை தந்து, அதிகமான அளவிற்கு அந்த மனுக்களைப் பைசல் செய்ய மின் வாரியம் ஏற்பாடு செய்யலாம் என்று தெரிவித்து இருக்கிறார்கள். அதை அரசு ஏற்றுக்கொண்டு செயல்படுத்துகிறது. இன்றுள்ள மின் நிலை பற்றி தனிக் கேள்வி போட்டால் விடை தர முடியும்.

திருவில்லிப்புத்தூர் வட்டத்தில் பாதை புறம்போக்கு நிலத்தை நத்தம் புறம்போக்காக மாற்றுதல்

*வினா எண். 323—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவில்லிப்புத்தூர் வட்டம், கிருஷ்ணாபுரத்தில் வசிக்கும் அரிசன பொதுமக்களுக்கு பாதை புறம்போக்கு நிலத்தை வீட்டு மனைப்பட்டா வழங்குவதற்கு நத்தம் புறம்போக்காக தரம் மாற்றம் செய்யும் செயற்குறிப்பு தற்பொழுது என்ன நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இராமநாதபுரம் வட்டம், கிருஷ்ணாபுரம் கிராமத்தில், 4·73 ஏக்கரில், 0·38 ஏக்கர் நிலத்தை 19 ஆதிதிராவிட மக்கள் ஆக்கிரமித்து வீடுகள் கட்டியுள்ளனர். இவர்களுக்கும், மேலும் வீடற்ற நபர்களுக்கும் வீட்டுமனை வழங்குவதற்கு ஏதுவாக மேற்படி நிலத்தில் 2.46 ஏக்கர் நிலத்தை, வண்டிப்பாதை புறம்போக்கிலிருந்து நத்தமாக வகை மாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. விரைவில் வீட்டு மனைப் பட்டா ஒப்படை வழங்கப்படும்.

1981 மார்ச் 2]

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் எடுத்துள்ள நடவடிக்கைக்கு நன்றி. அரசுப் புறம்போக்கு நிலங்களில் வீடு இல்லாத ஏழைகளுக்கு எந்த அடிப்படையில் எவ்வளவு நிலம் கொடுக்கப்படுகிறது? குடிசை வாழ்மக்கள் அல்லாமல், வசதி உள்ளவர்கள் கூட புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்து வீடுகளைக் கட்டி வாடகைக்கு விட்டு இருக்கிறார்களே, அதைத் தடுக்க என்ன நடவடிக்கையை அரசு எடுத்து இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆக்கிரமிப்பு என்கிறபோது, ஆக்கிரமிப்பு செய்தவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டும் என்று சட்டத்திலே இடம் இல்லை. யார் ஆக்கிரமிப்பு செய்து இருந்தாலும் அவர்களை வெளியே அனுப்பவேண்டும் என்றுதான் அரசு கொள்கையாகக் கொண்டு இருக்கிறது. ஆக்கிரமிப்பு செய்தவர்கள் வேறு நிலம் இல்லாத ஏழைகளாக இருந்தால், அவர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில், மனிதனின் தேவையைப் பூர்த்தி செய்யும் முறையில் அந்த நிலம் அரசுக்குத் தேவை இல்லை என்றால். அதை அரசு கொடுக்கிறது. அரசுக்குத் தேவை என்றால அந்த இடத்தில் இருப்பவர்கள் நிலம் அற்றவர்களாக இருந்தால்— வேறு நிலம் பார்த்துக்கொடுக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, அரசுப் புறம்போக்கு நிலங்களில் அரசு எண்ணியுள்ள சில குறிப்பிட்ட திட்டங்களை நிறைவேற்றவிடாமல், குடிசைகளைப் போட்டு விடுகிறார்கள். அதுமட்டுமல்லாமல், புறம்போக்கு நிலங்களில் மட்டும் இல்லை, ஓடைப் புறம்போக்கு, ஆற்றுப் புறம்போக்கு போன்ற இடங்களிலும் பல அரசியல் கட்சிகள் மன்றங்கள் நிறுவி ஆக்கிரமிப்பு செய்கிறார்களே, அதைத் தடுக்க இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, முறையற்ற வகையிலே எங்கே ஆக்கிரமிப்பு செய்திருந்தாலும், அதை அகற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறது.

திரு. எல். இளையபெருமாள் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதற்கு நன்றி சொன்னாலும் பட்டா கொடுக்கப்பட்ட பிறகு நிலச்சுவான்தார்கள், ரெவின்யூ அதிகாரிகளை நத்தம் கிராமத்திற்கு அனுப்பி, கொடுத்த பட்டாவை கான்சல் செய்து இருக்கிறார்கள், அது குறித்து

அரசாங்கத்திற்கு ஏதாவது தகவல் வந்து இருக்கிறதா, அதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கும் நிலச்சுவான்தார்களுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. அரசு பட்டா கொடுத்து விட்டால், அதை ரத்து செய்வதற்கு நிலச் சொந்தக் காரர்களுக்கு எந்தவிதமான உரிமையும் இல்லை. அப்படி எங்காவது நடைபெற்று இருந்தால், அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் படும்.

கூத்தூர் கிராம அரசு புறம்போக்கில் நிலப் பட்டா வழங்கல்.

*வினா எண். 324—திரு. எம். கே. ராஜமாணிக்கம். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி மாவட்டம், லால்குடி தாலுக்கா, கூத்தூர் கிராமத்தில் அரசு புறம்போக்கில் குடியிருக்கும் பொது மக்கள் நிலப் பட்டா கேட்டதற்கு அரசு தரப்பில் மேற்படி நிலத்தின் மீது வழக்கு இருக்கிறது என்று பதில் கொடுத்தது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் வழக்கு தற்போது எந்த நிலையில் உள்ளது?

(இ) அவர்களுக்குப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ), (ஆ) மற்றும் (இ) கூத்தூர் கிராமம், நெடுஞ்சாலையில் உள்ள மேம்பாலத்திற்குப் பாதை அமைப்பதற்காக புல எண். 54/2-இல் உள்ள நிலம் ஆர்ஜிதம் செய்ததன் காரணமாக அந்த நிலத்தில் இருந்த 113 குடிசைகளையும் காலி செய்து, மாற்று இடம், புல எண். 45/1-இல் குடியமர்த்த உத்திரவிடப்பட்டது. அந்த நிலத்திற்கு உரிமை கோரி திருமதி மீனாட்சி சுந்திரத்தாம்பாள் என்பவர் உயர் நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கில் இடைக்காலத் தடை உத்திரவு வழங்கப் பட்டதன் காரணமாக கண்ணனூர் கிராமம் புல எண். 82/1பி-இல் உள்ள நிலத்தில், எல்லாக் குடிசைவாசிகளும் குடியமர்த்தப் பட்டுள்ளனர்.